உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்!! தமிழனாய!!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 21.09.2026 • மலர் 04 • இதழ்: 264 • திங்கள் • Edition : Nagercoil • 21.09.2026 • Vol : 04 • Issue : 264 • Page : 4 • Rs. 5/-

இடைத்தேர்தலில் தவெக வேட்பாளர்களுக்கு ஆதரவாக முதல்வர் விஜய் உட்பட 40 நட்சத்திரப் பேச்சாளர்கள் பிரச்சாரம்

சென்னை: மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலுக்கு தவெக சார்பில் முதல்வர் விஜய், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உட்பட 40 நட்சத்திரப் பேச்சாளர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளனர்.

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அக்.6ம் தேதி நடைபெற உள்ளது. இரு தொகுதிகளிலும் தவெக, திமுக, அதிமுக, நாம் தமிழர், கம்யூனிஸ்ட் என ஐந்து முனைப்போட்டி நிலவுகிறது. இதில், தவெக தலைமையில் உருவாகியுள்ள மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி சார்பாக மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகியோர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தவெக தேர்தல் கண்காணிப்பாளர்களாக அமைச்சர்கள் ஆனந்த், செங்கோட்டையன், நிர்மல்குமார் ஆகியோர் சமீபத்தில் நியமிக்கப்பட்டனர். தொகுதி பொறுப்பாளரான அமைச்சர் ஆதவ் அர்ஜுனா (மதுராந்தகம்), அமைச்சர் அருண்ராஜ் (தாராபுரம்) ஆகியோர் களத்தில் இறங்கி மும்முரமாக தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்த நிலையில், தவெக வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் மேற்கொள்ளும் நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியல் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட நிலையில், ஆணையம் தற்போது அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, முதல்வர் விஜய், அமைச்சர்கள், தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், விசிக தலைவர் திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொய்தீன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, முதன்மைச் செயலாளர்துரைவைகோ உட்பட 40 பேர் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளதாக தவெக தலைமை தெரிவித்துள்ளது.

20 நட்சத்திரப் பேச்சாளர்களைக் கொண்டு தமிழக சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்தித்த தவெக, வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. இதன் காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சி என்ற அந்தஸ்தையும் பெற்றது. அக்கட்சிக்கு விசில் சின்னத்தையும் தேர்தல் ஆணையம் உறுதி செய்தது. தற்போது இடைத்தேர்தலுக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் உட்பட 40 நட்சத்திரப் பேச்சாளர்களை தவெக களமிறக்குவது கூடுதல் பலமாக பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அணை மதகுகளின் தரம் குறித்து ஆய்வு பாதுகாப்பை வலுப்படுத்த திட்டம்



மேட்டூர்: மேட்டூர் அணையில் விரிவான அணை பாதுகாப்பு மதிப்பீட்டு குழுவின் நீரியல் மற்றும் இயந்திரவியல் நிபுணர் குல்சன் ராஜ் உள்ளிட்ட அதிகாரிகள், மதகுகளின் செயல்பாடுகள், தரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேட்டூர் அணையில் விரிவான அணை பாதுகாப்பு மதிப்பீட்டு குழுவின் நீரியல் மற்றும் இயந்திரவியல் நிபுணர் குல்சன் ராஜ் இன்று காலை ஆய்வு செய்தார். அப்போது, அணையின் இடது கரை, வலது கரை, ஆய்வு சுரங்கம், கவர்னர் பாயின்ட், நீர் அளவீட்டு கருவிகள், தானியங்கி அளவீட்டு கருவிகள், மேல் மற்றும் கீழ் மட்ட மதகு பகுதி, நில அதிர்வு கருவிகள் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு செயல்பாடுகள் குறித்து அதிகாரிகள் கேட்டறிந்தனர்.

அணையின் வலது கரையில் 5, 8 கண் மதகு மற்றும் இடதுகரையில் உள்ள 16 கண் மதகுகளை ஏற்றி, இறக்கியும் மதகுகளின் இயக்கம், பராமரிப்பு உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தனர். தொடர்ந்து, படகு மூலம் சென்று மதகுகளை பார்வையிட்டு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், 16 கண் மதகு வழியாக வெள்ள உபரிநீர் திறக்கப்படும் போது மேற்கொள்ளப்படும் பணிகள், பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

ஆய்வு அறிக்கை விரைவில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அணையை வலுப்படுத்தும் பணிகள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களை விரிவு படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆய்வின் போது, மேட்டூர் அணை செயற்பொறியாளர் வெங்கடாஜலம், உதவி பொறியாளர் சதிஷ், பிரசாந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

மீரட்டில் மிரட்டிய சூர்யகிரண் விமான சாகசக் குழு மத்திய அமைச்சர் உள்ளிட்டோர் கண்டுகளிப்பு



மீரட்: உத்தரப் பிரதேசத்தின் மீரட் நகரில், இந்திய விமானப்படையின் சூர்யகிரண் விமான சாகச நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் சஞ்சய் சேத் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சாகச நிகழ்வை கண்டுகளி'தனர்.

இது தொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்திய விமானப்படையின் சூர்யகிரண் விமான சாகசக் குழு, செப்டம்பர் 19, 20 ஆகிய தேதிகளில் முதன் முறையாக மீரட்டில், சாகச நிகழ்வுகளை நடத்தியது. மாணவர்கள், தேசிய மாணவர் படையினர், சாரணர் இயக்கத் தன்னார்வலர்கள் உட்பட ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர், இரண்டு நாட்களில் இந்த சாகசக் காட்சியைக் காண திரண்டனர்.

(செப்டம்பர் 20) இந்த நிகழ்ச்சியை பாதுகாப்புத் துறை இணையமைச்சர் சஞ்சய் சேத் உள்ளிட்டோர் கண்டுகளித்தனர். இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் சஞ்சய் சேத் வெளியிட்டுள்ள பதிவில், 'ஒழுக்கம், துல்லியம், குழுப்பணி, தொழில் முறை சேவை ஆகியவற்றின் ஒரு குறிப்பிடத்தக்க கலவை இந்த நிகழ்ச்சி. இந்திய விமானப்படையின் புகழ் பெற்ற திறன்களுக்கு இது ஒரு சான்று' என்று விவரித்துள்ளார்.

இந்த அணிவகுப்பின் முதல் நாளான நேற்று தனது சமூக ஊடக எக்ஸ் தளத்தில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்ய நாத் வெளியிட்ட பதிவில், 'மூவண்ணக் கொடியின் வண்ணங்களால் வானத்தை அலங்கரித்த விமானிகளின் பிரமிக்க வைக்கும் துல்லியம் பாராட்டுக்குரியது. இது உத்தரப்பிரதேசத்துக்கு மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த தேசத்திற்கும் ஒரு பெருமைமிக்க தருணம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

1996ல் நிறுவப்பட்ட சூர்யகிரண் சாகச குழு, ஆசியாவிலேயே 9 விமானங்களைக் கொண்ட ஒரே வானூர்தி சாகசக் குழு என்ற பெருமையைப் பெற்றுள்ளது. சூர்யாகிரண் ஒரு வானூர்தி சாகசக் குழு என்பதைத் தாண்டி இந்திய விமானப் படையின் தூதுவர்கள்' என்ற வகையில், அது பறக்கும் இடமெல்லாம் விமனப் படையின் சிறப்பையும் சேவை உணர்வையும் எடுத்துச் செல்கிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணியல் அருகே வாலிபரை கொன்று குளத்தில் வீசிய 3 பேர் கைது

இரணியல், செப். 21 குருந்தன்கோடு பகுதி காடேற்றி என்ற கிராமத்தில் காடேற்றி குளம் உள்ளது. இந்த குளத்தில் இருந்து ரத்தம் வழிந்த நிலையில் வாலிபர் ஒருவரின் உடல் மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட எஸ்பி அன்சுல் நாகர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினார். விசாரணையில் கொலை செய்யப்பட்டவர் பூதப்பாண்டி அருகே உள்ள அழகிய பாண்டிபுரம் பகுதியை சேர்ந்த வாலிபர் ஆல்வின் ராஜேஷ் என்பது தெரிய வந்தது.

இதையடுத்து வாலிபரின் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து இரணியல் போலீசார் நடத்திய விசாரணையில் ஆல்வின் ராஜேஷ் தற்போது வெள்விளைச்சந்தை பகுதியில் உள்ள அவரது சகோதரி வீட்டில் வசித்து வந்ததாகவும் சம்பவ தினம் இரவு நண்பர்களை சந்திக்க சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்பதும் தெரிய வந்தது.

எனவே அவரது நண்பர்கள் தொடர்பாக போலீசார் விசாரித்தனர். மேலும் அவர் அந்த குளத்திற்கு செல்லக்கூடிய சாலைகளில் இருக்கும் கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். செல்போன் அழைப்புகளும் ஆய்வு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் முதலில் முக்கலம்பாடு பகுதியை சேர்ந்த வாலிபர் ஒருவரை பிடித்து அவரை விசாரித்தனர்.

விசாரணையில் மொத்தம் 5 பேர் சேர்ந்து குளத்தின் கரையில் அமர்ந்து மது அருந்தியதாகவும், 2 பேர் சென்று விட்டதும், பின்னர் 3 பேர் தொடர்ந்து மது அருந்திக் கொண்டிருந்ததாகவும் தெரிய வந்தது, அதன் அடிப்படையில் முக்கலம்பாடு சார்லஸ், சுமன், சாந்தபுரம் பகுதியை சேர்ந்த சுபின், ஆகியோர் என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் மூன்று பேரையும் நேற்று முன்தினம் இரவு போலீசார் கைது செய்தனர்.

தொடர் விசாரணையில் இவர்கள் ஒன்றாக மது அருந்திக் கொண்டிருந்த போது ஆல்வின் ராஜேஷுக்கும், சார்லசுக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. சார்லஸ் ன் உறவுக்கார பெண் ஒருவரை ஆல்வின் ராஜேஷ் கிண்டல் செய்ததாகவும் இது தொடர்பான வாக்குவாதத்தில் இந்த கொலை நடந்ததாகவும் தெரிய வந்துள்ளது. மேலும் இந்த சம்பவத்தில் வேறு யாராவது ஈடுபட்டுள்ளார்களா எனவும் விசாரணை நடந்து வருகிறது.

"டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது" அமைச்சர் அருண்ராஜ்

சென்னை: "டெங்கு காய்ச்சல் குறித்து பொது மக்கள் அச்சப்படத் தேவையில்லை. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்பொழுது டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது" என மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

தமிழகசட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி பிரபாகர் மற்றும் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் ஆகியோர் (20.09.2026) சென்னை வள்ளுவர் கோட்ட கலையரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர்கள் சங்க 8வது மாநில மாநாட்டை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.

இதனை தொடர்ந்து அமைச்சர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: இன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ் நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவருடன் கலந்து கொண்டேன். இந்த மாநாட்டில் செவிலியர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை தெரிவித்துள்ளனர்.

செவிலியர்கள் மருத்துவக் கட்டமைப்பில் ஒரு முக்கிய அங்கமாக பங்காற்றுகிறார்கள். ஒரு மருத்துவ மனையின் மூளையாக மருத்துவர்கள் இருந்தாலும், செவிலியர்கள் இதயத்திலிருந்து நோயாளிக்கு அன்பும், அரவணைப்பும் கொடுத்து தேவையான மருத்துவப் பராமரிப்பை கொடுக்கிறார்கள். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அளித்துள்ளார்கள். அரசு அவர்களின் கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து, முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, கூடிய விரைவில் அவர்களை அழைத்துப்பேசி தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய செவிலியர் கல்லூரிகளுக்கான ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கனவே பிஎஸ்சி நர்சிங் படித்து, அரசு மருத்துவமனைகளில் 15 ஆண்டுகள் பணிபுரிந்த எம்எஸ்சி நர்சிங் படித்தவர்ககளை செவிலியர் கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. தகுதி அடிப்படையில் அவர்களும் பணியமர்த்தப் படுவார்கள். டெங்கு காய்ச்சல் குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள்தான் உள்ளது. 2023ல் மொத்தம் 56,863 பாதிப்புகள் இருந்தன. 2024ல் 46,971 பாதிப்புகள். 2025இல் 25,585 பாதிப்புகள் இருந்தன. இந்த ஆண்டில் இதுவரை 17,049 பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

எனினும், அரசு அலட்சியமாக இல்லை. போதுமான கொசு ஒழிப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, வீடு வீடாகச் சென்று மழை நீர் தேங்கியுள்ள இடங்களைக் கண்டறிந்து அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மருத்துவமனைகளில் சிகிச்சையளிப்பதற்காகத் வழிகாட்டுதல்களும் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. உயிரிழப்புகள் ஏற்படக்கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்து முதல்வர் மருத்துவத் துறை, நீர்வளத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத்துறை போன்ற அனைத்து துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளார். இதில் பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

இந்தியா - இலங்கை இருதரப்பு கடற்படை பயிற்சி: கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்த முயற்சி

புதுடெல்லி: இந்தியா இலங்கை இடையே கடல்சார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், இருதரப்பு கடற்படைப் பயிற்சி விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கை இந்தியா இருதரப்பு கடற்படைப் பயிற்சியான ஸ்லினெக்ஸ்26ன் 13வது பதிப்பு, செப்டம்பர் 17 முதல் 21 வரை விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.

இந்திய கடற்படை சார்பில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க்கப்பலான ஐஎன்எஸ் கவரட்டியும், கடற்படை எரிபொருள் நிரப்பும் கப்பலான ஐஎன் எஸ் ஜோதியும் இதில் பங்கேற்றுள்ளன. இலங்கைக் கடற்படை சார்பில் எஸ் எல்என்எஸ் சிந்துராலா இதில் பங்கேற்றுள்ளது.

இப்பயிற்சி இருகடற்படைகளுக்கும் இடையே கடல்சார் ஒத்துழைப்பு, ஒருங்கிணைந்த செயல்பாடு, பரஸ்பர புரிதலை வளர்ப்பதற்கான ஒரு முக்கிய தளமாக உருவெடுத்துள்ளது. இந்தியாவின் மகாசாகர் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, ஸ்லினெக்ஸ்26 பயிற்சியானது, பாதுகாப்பான, நிலையான, அனைவரையும் உள்ளடக்கிய கடல்சார் சூழலுக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதோடு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீடித்த கடல்சார் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு வட்டம் ஆற்காடு கண்ணமங்கலம் சாலை விளாப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள நாராயணபுரம் கிராமத்தில் அமைந்துள்ள குடைவரைக் கோயில். பஞ்சபாண்டவர்மலை என்று அழைக்கப்படும் இடத்திற்கு தமிழ்நாடு தொல்லியல் துறை இயக்குநர் முனைவர்.வீ.ப.ஜெயசீலன், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஒருநூறாம்வயலில் தரையில் உட்கார்ந்து பழங்குடி மக்களின் கோரிக்கைகள் குறித்து ஆட்சியர் நேரில் ஆய்வு



ஆறுகாணி செப் 20 ஆறுகாணி அருகே ஒருநூறாம்வயல் பகுதியில் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் பிரவீண் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் பிரதாப், சார் ஆட்சியர் மற்றும் வனத்துறை அதிகாரிகள் நேரில் சென்று பழங்குடி மக்களை சந்தித்து அவர்களின் அடிப்படை தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தனர்.

அப்போது, சாலை வசதி, குடிநீர் வசதி, பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு பட்டா வழங்குதல், வீடு மற்றும் மின்சார வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மக்கள் முன்வைத்தனர்.

குறிப்பாக கீழ்மலை சாலை, கடம்பாவயல் சாலை, நெட்டவயல் சாலை, புளிமூட்டுகாலை–கல்லறவயல் சாலை உள்ளிட்ட சாலைகளை காங்கிரீட் சாலைகளாக மாற்றித் தர வேண்டும்எனகோரிக்கை விடுத்தனர்.

மேலும், கோடை காலங்களில் கீழ்மலை பகுதியில் ஏற்படும் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்கநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும், பழங்குடி மக்களின் கையிருப்பு சொத்துகளுக்கு பட்டா வழங்க வேண்டும் என்றும் மக்கள் வலியுறுத்தினர்.

தாங்கள் நட்டு வளர்த்த மரங்களை வெட்டுவதற்கு உரிய அனுமதி வழங்க வேண்டும், அரசு வீடுவழங்கும்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்க வேண்டும், கழிப்பறை வசதி மற்றும் வீடுகளுக்கு மின்சார வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் ,உள்ளிட்ட கோரிக்கைகளையும் மக்கள் ஆட்சியரிடம் முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பேசிய மாவட்ட ஆட்சியர் பிரதாப், மக்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் குறித்து உரிய ஆய்வு மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

குறிப்பாக, பட்டா வழங்குவது தொடர்பாக அடுத்த வாரம் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அரசு வீடு வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் தகுதியானவர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்

மேலும், பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சியர், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் அவற்றை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

இந்நிகழ்வில் பேரூராட்சி தலைவர், களியல் வனத்துறை சரக அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்விட்டோர் கலந்து கொண்டனர்.

குமரியில் கனிம வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி;மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

நாகர்கோவில், செப்.21 தமிழக உயர்நீதிமன்ற ஆணையின்படி, கற்குவாரிகள் மற்றும் ஜல்லி கிரஷர் உட்பட கனிம சேமிப்பு கிடங்குகள் ஆகியவற்றில் இருந்து கனிமங்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும் ஜிபிஎஸ் கருவி கட்டாயம் பொருத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த 02.09.2026 அன்று தலைமைச்செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஜிபிஎஸ் பொருத்தும் பணியினை விரைந்து முடித்திட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மேலும், குமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின் படி, மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அனுமதி பெற்ற குவாரிகள் மற்றும் கனிம இருப்பு மற்றும் சேமிப்பு கிடங்குகளிலிருந்து கனிமம் ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கு ஜிபிஎஸ் பொருத்துதல் மற்றும் அதனை எம் ஐ எம் ஏ எஸ் இணையதளத்துடன் ஒருங்கிணைத்தல் குறித்த கூட்டமானது நடைபெற்றது. கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் குமரியில் அனுமதி பெற்ற குவாரிகள் மற்றும் கனிம இருப்பு மற்றும் சேமிப்பு கிடங்குகளின் குத்தகைதாரர்களும், பதிவு செய்த வர்களும் மற்றும் கனிம வாகன போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகன உரிமையாளர்கள் சங்கத்தினர்கள் கலந்து கொண்டனர்.

அங்கீகரிக்கப்பட்ட 37 நிறுவனங்களில் ஏதேனும் நிறுவனத்தை அணுகி ஜிபிஎஸ் கருவியினைப் பெற்று கனிம வாகனங்களில் 30.09.2026க்குள் பொருத்தி www.mimas.tn.gov.in இணையதளத்தில் ஒருங்கிணைத்திட வேண்டும் எனவும் 30ம் தேதிக்குள் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே நடைச்சீட்டு, இடைமாற்றுச் சீட்டு அனுமதிக்கப்படும் என அனுமதி பெற்ற அனைத்து குவாரி குத்தகைதாரர்கள் மற்றும் சேமிப்பு கிடங்கு உரிமையாளர்கள் மற்றும் கனிம வாகன போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகன உரிமையாளர்கள் சங்கத்தினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை மூலம் அனுமதி பெற்ற குவாரிகள் மற்றும் கனிம இருப்பு மற்றும் சேமிப்பு கிடங்குகளிலிருந்து கனிமம் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அனைத்திலும் எதிர்வரும் 30.09.2026க்குள் GPS கருவியினை தங்களது வாகனத்தில் பொருத்தி அதனை புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் www.mimas.tn.gov.in இணைய தளத்தில் ஒருங்கிணைத்திட அனுமதி பெற்ற அனைத்து குவாரி குத்தகைதாரர்கள் மற்றும் சேமிப்பு கிடங்கு உரிமையாளர்கள் மற்றும் கனிம வாகன போக்குவரத்தை மேற்கொள்ளும் வாகன உரிமையாளர்கள் சங்கத்தினர் ஆகியோரிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. கருவியினை பொருத்தாத வாகனங்களை கனிமம் ஏற்றிச் செல்ல நடைச்சீட்டு, இடைமாற்றுச் சீட்டு அனுமதிக்கப்படாது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. என கலெக்டர் அறிவித்துள்ளார்.

ஆட்சிகள் மாறலாம்....கொள்கையும் திட்டங்களும் மாறக்கூடாது திராவிட கழக தலைவர் கி வீரமணி சொல்கிறார்



தஞ்சாவூர்
செப்டம்பர் 21

ஆட்சிகள் மாறலாம்... ஆனால் கொள்கையும் திட்டங்களும் மாறக் கூடாது என திராவிட கழகத் தலைவர் கி வீரமணி கூறினார்

பெரியாரின் 148 வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர்சமத்துவபுரத்தை உருவாக்கிய பெரியார் நடை என்ற வாக்கத்தான் நிகழ்ச்சியை நடந்தது. தஞ்சாவூர் புதிய பஸ் நிலையத்தில் இருந்து தொடங்கிய நடை பயணத்தை திராவிடர் கழக தலைவர் கி வீரமணி தொடங்கி வைத்தார்

இதில் ஆண்கள், பெண்கள், கல்லூரி, பள்ளி, மாணவ, மாணவி யர்கள் கலந்து கொண்டனர் .இந்த நடைபயணம் மன்னர் சரபோஜி கல்லூரி சாலை, பழைய வீட்டு வசதி வாரியம் வழியாக குழந்தை இயேசு கோவில் ஆர்ஆர் நகர் வழி யாக மீண்டும் புதிய பஸ் நிலையத்தை சென்ற டைந்தது .

நடை பயணத்தை தொடங்கி வைத்து திராவிட கழகத் தலைவர் கி வீரமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது ;

உடல் நலம் ,உள்ள நலம் இரண்டு நலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக பெரியார் முன்னால் நின்று அடையாளப்படுத் தி நடத்தப்படுகிறார்.பெரியாரைப் பின் பற்றி நடந்தால் இறுதி வெற்றி நமகே.

மாணவர்பாரதிதாசனுக்கு அயல க கல்வி உதவித் தொகை வழங்காமல் அநீதி இழைக்கப்பட்டு இருக்கிறது .அயலக மாணவர் திட்டத்தை மு க ஸ்டாலின் சிறப்பாக தொடங்கி னார் .ஆனால் ஒரு அமைச்சர் உடனடியாக நாங்கள் மாணவர்களுக்கு உதவித்தொகை அனுப்புகிறோம் .தேவையில்லாத பிரச்சினையை உண்டாக்கக் கூடாது என்கிறார் .

ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடையூறு இல்லாமல் இந்த திட்டம் தொடர வேண்டும், அவ்வாறு தொடர்வதன் மூலம் உலகம் முழுவதும் தமிழ்நாட்டின் பெருமையும் ,ஆட்சிக்கு பெரு மையும் ஏற்படும் . ஆட்சிகள் மாறலாம். கொள்கை மாறக்கூடாது. திட்டங்கள் மாறக்கூடாது.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் குடிநீர் ,பக்தர்கள் மீது தீர்த்தமாக தெளிக்கப்பட்டது குறித்து எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அவர், இது பெரியார் நடை இதைப் போட் டால் பெரியார் பின்னால் போய் விடுவார் .மீனாட்சியை முன்னாடி நிறுத்த விரும்பவில்லை .

இவ்வாறு அவர் கூறினார்.

இதில் திராவிடக் கழக பொதுச் செயலாளர் அன்புராஜ் ,திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம், மாநகரசெயலாளர் சண். ராமநாதன், மாநகராட்சி மேயர் (பொறுப்பு) டாக்டர் அஞ்சுகம் பூபதி திராவிட கழக மாவட்ட தலைவர் அமர்சிங் ,காப்பாளர் அய்யனார், மாநில ஒருங்கிணைப் பாளர் ஜெயக்குமார், மாநகர தலைவர் தமிழ்ச்செல்வன், செயலாளர் வீரக்குமார் ,மாநில இளைஞரணி துணை செயலாளர் வெற்றிக்குமார் , மகளிர் மகளிர் அணி அமைப் பாளர் கலைச்செல்வி அமர்சிங், அரிமா சங்க நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மூன்றில் ஒருவருக்கு இரத்த அழுத்தம்,இருவரில் ஒருவருக்கு நீரிழிவு அபாயம் கே.எம்.சி.ஹெச் மேற்கொண்ட ஆய்வில் அதிர்ச்சி தகவல்!



கோவை செப்:21 2,250 படுக்கைகள் கொண்ட முன்னணி பல்துறை மருத்துவமனையான கேஎம்சிஹெச்,கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக மக்களுக்கு தரமான மருத்துவசேவைகளைஅளித்து வருகிறது.புதிய தொழில்நுட்பங்களையும்,அதிநவீன சிகிச்சை வசதிகளையும் நோயாளிகளின் நலனுக்காக அறிமுகப்படுத்துவதில் இம்மருத்துவமனை எப்போதும் முன்னணியில் உள்ளது.

நிர்வாக இயக்குநர் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமியின் கூறுகையில்மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியாவில் வெளியிடப்படும் மருத்துவ ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை இன்னும் குறைவாகவே உள்ளது. ஆனால்,தொற்று,தொற்றா நோய்களின் சுமையைக் கருத்தில் கொண்டால்,இந்தியாவில் சுகாதார ஆராய்ச்சிக்கு மிகப் பெரிய வாய்ப்பு உள்ளது.

நீரிழிவு, இரத்த அழுத்தம்,உடல் பருமன் போன்ற நோய்கள் எத்தனை பேர்களுக்கு இருக்கின்றன என்பதைப் தெரிந்துகொள்ள, கேஎம்சிஹெச் மருத்துவமனை 2015ல் கேஎம்சிஹெச் ஆராய்ச்சி மையத்தைத் தொடங்கியது. இந்த மையத்தின் முக்கிய திட்டமான கேஎம்சிஹெச் தொற்றா நோய்கள் ஆய்வு (Non Communicable Diseases),கிராமம்,சிற்றூர், நகரம் ஆகிய மூன்று வகையான பகுதிகளிலும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக (2015–2026) மக்களைத் தொடர்ந்து கண்காணித்தது. "முன்கூட்டியே கண்டறிவது,நோய் வளர்ச்சியைப் புரிந்துகொள்வது,நோயைத் தடுப்பது".என்ற நோக்கத்துடன் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

பத்து ஆண்டு கால கண்காணிப்பில் ஒரு விஷயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது:உடல் பருமன் உள்ளவர்களின் எண்ணிக்கை 43.1 சதவீதத்திலிருந்து 57.0 சதவீதமாக உயர்ந்துள்ளது; பெண்களிடையே (63.3%) மற்றும் 2040 வயது இளைஞர்களிடையே (61.4%) இது இன்னும் அதிகம்.இரத்த அழுத்தமும்,நீரிழிவும் இதே போல் உயர்ந்துள்ளன.உடல் பருமன்,அதிக இரத்த அழுத்தம்,அதிக சர்க்கரை அளவு,கொழுப்புச் சத்து ஏற்றத்தாழ்வு ஆகியவை ஒன்றுசேர்ந்து வருவதையும் ஆய்வு கண்டறிந்துள்ளது.

இது எந்த அறிகுறியும் இல்லாமலேயே இரத்த நாளங்களைப் பாதிக்கிறது;அறிகுறியே இல்லாத பலரிடம் இதய தமனி அடைப்பும் கண்டறியப்பட்டது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட நபர்களை ஆண்டுதோறும் கண்காணித்துப் பார்த்ததில் ஆரோக்கியமாக இருந்த மூன்று நபர்களில் ஒருவருக்கு இரத்த அழுத்தம் இருக்கிறது;சர்க்கரை அளவு சாதாரணமாக இருந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோருக்கு சர்க்கரை நோய் இருக்கிறது அல்லது சர்க்கரை நோய் வரக்கூடிய நிலையில் இருந்தனர்.

ஆரோக்கியமான எடையில் இருந்த மூன்று நபர்களில் ஒருவருக்கு மேல் உடல் எடை கூடியது;ஐந்தில் ஒருவருக்குதமனிகளில் ஆரம்ப நிலை பாதிப்பு தென்பட்டது:நான்கில் ஒருவருக்கு மேல் இரத்தசோகை இருக்கிறது. இவை அனைத்தும்,நோய் வந்த பிறகு சிகிச்சை அளிப்பதைவிட,முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதே சிறந்த வழி என்பதை மீண்டும் நிரூபிக்கின்றன

இந்த ஆய்வு முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளவும்,சர்வதேச அளவில் ஒத்துழைப்பை வளர்க்கவும்,கிராமப்புற பொது சுகாதாரம் மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பான 3வது சர்வதேச மாநாட்டை கேஎம்சிஹெச் நடத்தியது. கோவை காளப்பட்டியில் உள்ள டாக்டர் என்ஜிபி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் மருத்துவர்கள்,ஆராய்ச்சியாளர்கள்,பொது சுகாதார நிபுணர்கள்,கொள்கை வகுப்பாளர்கள்,பேராசிரியர்கள்,மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இங்கிலாந்து,சுவிட்சர்லாந்து,கனடா உள்ளிட்டநாடுகளிலிருந்தும்,இந்தியாமுழுவதிலுமிருந்தும் வந்த நிபுணர்கள் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். இளம் ஆராய்ச்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் டாக்டர்.தவமணி தேவி பழனிசாமி இளம் ஆய்வாளர் விருதும் வழங்கப்பட்டது.

தஞ்சை உள்பட 21 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை: அந்தமான் அருகே புதிய காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதால், தஞ்சாவூர் உள்பட 21 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது.

இது வடமேற்கு திசையில் கிழக்குமத்திய வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் நிலவுகிறது. இது மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை கிழக்குமத்திய வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், செப்.22ம் தேதி ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும் படிப்படியாக வலுவடையக்கூடும்.

தெற்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள மேற்குமத்திய வங்கக் கடல் பகுதிகளில் சுமார் 0.9 கிமீ உயரத்தில் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் (செப்.21) நீலகிரி, கோவை, தருமபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, சிவகங்கை, தஞ்சாவூர், மதுரை, கடலூர், திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஓரிருஇடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரியில் முதலாவது பட்டமளிப்பு விழா

237 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கல்



இராமநாதபுரம், செப்.21

இராமநாதபுரம் மாவட்டம் குதக்கோட்டை ஊராட்சி, வள்ளிமடன்வலசைகிராமத்தில்அமைந்துள்ளஅரசு சட்டக்கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், நீதியரசர் செல்வி பூர்ணிமா ஆகியோர் பங்கேற்று, சட்டக்கல்வியை நிறைவு செய்த 237 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினர்.

விழாவில் அமைச்சர் பேசுகையில், அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்கான அடிப்படை மற்றும் விடுதி வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப் பட்டு வருவதாக தெரிவித்தார். சட்டக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களுக்கு முறையாக பட்டமளிப்பு விழாக்கள் நடத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் கூறினார்.

நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்வு காண போக்சோ மற்றும் போதைப்பொருள்தடுப்பு சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல், நீதித்துறை உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் நியமனம் உள்ளிட்ட சீர்திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சென்னையில் 160 நீதிமன்றங்கள் ஒரே வளாகத்தில் செயல்படும் வகையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், மின்னணு தாக்கல், இணையவழிக் கட்டணம் உள்ளிட்ட நீதிமன்ற சேவைகள் நவீனப்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

தொடர்ந்து, உப்பூரில் நடைபெற்று வரும் அனல்மின் நிலைய கட்டுமானப் பணிகளை அமைச்சர் ஆய்வு செய்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரன், கல்லூரி முதல்வர் பேராசிரியர் முனைவர் ஜேம்ஸ் ஜெயபால், பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமுமுக-மமக கிழக்கு மாவட்ட பொதுக்குழு கூட்டம்

புதிய நிர்வாகிகள் ஏகமனதாக தேர்வு



ராமநாதபுரம், செப்.21

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி கே.எஸ்.கே. ஜின்னத் மஹாலில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் (தமுமுக), மனிதநேய மக்கள் கட்சி (மமக) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த கிழக்கு மாவட்ட பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. தமுமுக மாநிலச் செயலாளர் தொண்டி சாதிக் பாட்ஷா தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ஜிப்ரி வரவேற்றார்.

மமக மாநில அமைப்புச் செயலாளர் எம்.ஐ. பழனி ஃபாரூக் சிறப்புரையாற்றினார். தமுமுக மாநிலச் செயலாளரும் தேர்தல் பொறுப்பாளருமான கோவை சாகுல் ஹமீது, கட்சிப் பொறுப்புகள் குறித்து பேசினார். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து புதிய நிர்வாகிகளுக்கான தேர்தலை நடத்தினார்.

இதில் தமுமுகமமக மாவட்டத் தலைவராக வழக்கறிஞர் ஜிப்ரி, தமுமுக மாவட்டச் செயலாளராக பொறியாளர் ஜாவித் அசாம், மமக மாவட்டச் செயலாளராக ஜாகிர் உசேன், மாவட்டப் பொருளாளராக அகமது அசன், துணைத் தலைவராக சாகுல் ஹமீது உள்ளிட்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். பல்வேறு அணிகளுக்கும், திருவாடானை மற்றும் ராமநாதபுரம் ஒன்றியங்களுக்கும் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் தமிழகத்தில் முஸ்லிம்களுக்கான இடஒதுக்கீட்டை உயர்த்த வேண்டும், கடலோரப் பகுதிகளில் போதைப் பொருள் விற்பனையை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடல் அட்டைகள் பிடிப்பதற்கான தடையை நீக்கவேண்டும்உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர். தமுமுக மாவட்டச் செயலாளர் ஜாவித் அசாம் நன்றி கூறினார்.

ஓம் சக்தி மாரியம்மன் 21ம் ஆண்டு ஆடிப்பூர கஞ்சி வார விழா



தருமபுரி செப்டம்பர்21

தருமபுரி மாவட்டம் மக்களாட்சிப்பட்டி மாவுத்தலையான் கொட்டாய் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஓம் சக்தி மாரியம்மன் கோவிலில் 21 ம் ஆண்டு ஆடிப்பூர கஞ்சி வார விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவையொட்டி அதிகாலையில் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து கோவில் நிர்வாகத்தின்சார்பில்கங்கை பூஜை, அம்மன் கரகம் எடுத்தல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பக்தர்கள் தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றும் வகையில் தீச்சட்டி ஏந்துதல், அழகு குத்துதல் மற்றும் பால்குடம் எடுத்தல் உள்ளிட்ட நேர்த்திக்கடன்களை செலுத்தினர். பால்குட ஊர்வலம் கோவிலில் இருந்து புறப்பட்டு, முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் ஓம் சக்தி மாரியம்மன் கோவிலை வந்தடைந்தது.

இவ்விழாவின் நிறைவாக கோவில் நிர்வாகத்தின் சார்பில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர். இந்த விழாவில் ராஜா, முனுசாமி, காந்தி மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் சிக்கபூவத்தி பஞ்சாயத்து உப்புக்குட்டை கிராம பொதுமக்கள் சார்பில் விநாயகர் சதுர்த்தியையொட்டி பிரதிஷ்டைசெய்யப்பட்ட விநாயகர் சிலை, கே.ஆர்.பி. அணையில் கோலாகலமாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கரைக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி பள்ளியில் ரூ.10 லட்சத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

மாணவர்கள் பயன்பாட்டுக்கு எம்.பி. கோபிநாத் திறந்து வைத்தார்



கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரியில் செயல்பட்டு வரும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலைப்பள்ளியில் சுமார் 2,000 மாணவர்கள் படித்து வருகின்றனர். மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டும் என பள்ளி தலைமை ஆசிரியர், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து, கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து சுமார் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் பள்ளி வளாகத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்ததை தொடர்ந்து, அதன்திறப்பு விழா நடைபெற்றது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு தலைமையில் நடைபெற்ற விழாவில், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற எம்.பி. கோபிநாத், குடிநீர் நிலையத்தை ரிப்பன் வெட்டியும், குத்துவிளக்கு ஏற்றியும் மாணவர்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய எம்.பி. கோபிநாத்துக்கு பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் புனித பாத்திமா அன்னை திருத்தலத்தின் பங்குத்தந்தை அருள்ராஜ் ஆகியோர் பள்ளி நிர்வாகம் சார்பில் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

விழாவில் காங்கிரஸ் மாநிலக் குழு உறுப்பினர் ஏகம்பவாணன், மாவட்ட துணைத்தலைவர் பி.சி. சேகர், முன்னாள் மாவட்டத் தலைவர்கள் நாஞ்சில் ஜேசு, ராஜா குமாரவேல், நாராயணமூர்த்தி, சேலம் மண்டல ரயில்வே குழு உறுப்பினர் ரஹ்மத்துல்லா, நகரத் தலைவர் லலித் ஆண்டனி, மாநில அமைப்பாளர் ஆறுமுக சுப்பிரமணி, நகர்மன்ற உறுப்பினர் வினாயகம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆந்திராவின் புல்லூர் தடுப்பணை நிரம்பி தமிழகத்துக்குள் பாய்ந்த பாலாறு

விவசாயிகள் மகிழ்ச்சி



வாணியம்பாடி: வாணியம்பாடி அருகே ஆந்திர அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புல்லூர் தடுப்பணை முழு கொள்ளளவை எட்டி அதன் உபரி நீர் தமிழக பாலாற்றில் இன்று நுழைந்தது. இதை யடுத்து, விவசாயிகள், பொதுமக்கள் மலர் தூவி மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் அவ்வப்போது மழை பெய்து வந்தது. அதேபோல, தமிழக – ஆந்திர எல்லைப்பகுதியிலும் பாலாற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் கன மழை கொட்டி வருகிறது.

இதனால், ஆந்திர எல்லைப்பகுதியான இரட்டை பாலாறு, பெரும்பள்ளம் பகுதிகளில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளை கடந்து தமிழக – ஆந்திர எல்லையில் உள்ள புல்லூர் பகுதியில் ஆந்திர அரசு ரூ.120 கோடியில் கட்டியுள்ள புல்லூர் தடுப்பணையை கடந்து தமிழக பாலாற்று எல்லைக்குள் இன்று காலை தண்ணீர் வரத்தொடங்கியது.

இந்த தண்ணீரானது ஆவாரங்குப்பம், திம்மாம்பேட்டை, ராமநாயக்கன்பேட்டை, அம்பலூர், கொடையாஞ்சி வழியாக வாணியம்பாடி நோக்கி வர தொடங்கியது. புல்லூர் தடுப்பணையின் முழு கொள்ளளவை கடந்து ஆர்ப்பரித்து கொட்டும் மழை வெள்ளத்தை கண்டதும் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

புல்லூர் தடுப்பணை நிரம்பி உபரி நீர் வெளியேறுவதை அறிந்த வாணியம்பாடி மற்றும் ஆம்பூரைச் சேர்ந்த பொதுமக்கள் அப்பகுதிக்கு விரைந்து வந்து தடுப்பணையில் இருந்து வெளியேறும் மழை வெள்ளத்தை கண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

பலர் தங்களது கைபேசியில், தடுப்பணையில் இருந்து வெளியேறும் தண்ணீரை படம் பிடித்து சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்து மகிழ்ந்தனர். தமிழக எல்லையில் நுழைந்த தண்ணீர் வாணியம்பாடி அடுத்த ராமநாயக்கன் பேட்டையில் தமிழக அரசு கட்டியுள்ள முதல் தடுப்பணைக்கு நேற்று வந்தடைந்தது.

இந்த ஆண்டில் முதல் முறையாக புல்லூர் தடுப்பணை நிரம்பி உபரி நீர் தமிழக பாலாற்றுப்பகுதிக்குள் வந்துக்கொண்டிருப்பதை அறிந்ததும் பாலாறு பாதுகாப்பு சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் சிவன் கோயிலில் சிறப்பு வழிபாடு செய்தனர்.

பிறகு, புல்லூர் தடுப்பணைக்கு வந்து அங்கு பாலாற்று பகுதிக்கு வரும் தண்ணீருக்கு சிறப்பு பூஜைகள் செய்து கற்பூரம் ஏற்றி, மலர்களை தூவி தண்ணீரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

ஈரோட்டில் சமுதாய வளைகாப்பு விழா

100 கர்ப்பிணிகளுக்கு சீர் வரிசை பொருட்கள் வழங்கல்



ஈரோடு, செப்.20

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் ஈரோடு நகர்ப்புற வட்டாரத்தைச் சேர்ந்த 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்கள் விஜய் பாலாஜி, ஜெகதீஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு விழாவை தொடங்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு சீர் வரிசை பொருட்களை வழங்கினர். ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆனந்த் மோகன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் விஜய் பாலாஜி பேசுகையில், குழந்தையின் வளர்ச்சி கருவாக உருவான நாள் முதலே தொடங்குகிறது. கர்ப்பிணி பெண்கள் கர்ப்ப காலத்தில் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தால்தான் ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றெடுக்க முடியும் என்ற நோக்கத்தில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது என்றார்.

வசதிவாய்ப்பு குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கும் இந்த நன்மை கிடைக்க வேண்டும் என்ற தொலை நோக்கு பார்வையுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், சாதி, மத வேறுபாடின்றி அனைத்து கர்ப்பிணி பெண்களும் பயன் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச்சத்து, கல்வி, மருத்துவ வசதிகளை உறுதி செய்ய அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும், அங்கன்வாடி மையங்கள் மூலம் வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவுகளை தாய்மார்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அங்கன்வாடி பணியாளர்களுக்கு உரிய அங்கீகாரம் மற்றும் ஊதிய உயர்வு வழங்குவது குறித்தும் முதலமைச்சர் ஆலோசித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் பவித்ரா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மோகனவித்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தருமபுரியில் இந்தியில் மட்டும் பெயர் பலகை: தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் எதிர்ப்பு

2 நாட்களில் தமிழில் பெயர் பலகை மாற்ற போலீசார் அறிவுறுத்தல்



தருமபுரி செப்டம்பர் 21

தருமபுரி – சேலம் தேசிய நெடுஞ்சாலையில் செல்ஃபி பாலம் அருகே வடஇந்தியர்களால் நடத்தப்படும் தாபா ஒன்றில், பெயர் பலகை இந்தி எழுத்துகளில் மட்டுமே வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழில் பெயர் பலகை வைக்க வலியுறுத்தியும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தருமபுரி காவல் ஆய்வாளர் அறிவழகன், உதவி ஆய்வாளர் சேகர் ஆகியோர் இருதரப்பினரிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது தாபாவின் பெயர் பலகையை இரண்டு நாட்களுக்குள் தமிழில் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினர். இதையடுத்து போலீசாரின் அறிவுறுத்தலை ஏற்று, தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபடாமல் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்த போராட்டத்திற்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தருமபுரி மாவட்ட செயலாளர் பிரசாந்த் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் சின்னசாமி, மண்டல அமைப்புச் செயலாளர் தவமணி, ஒருங்கிணைந்த மாவட்ட அமைப்புச் செயலாளர் முனிரத்தினம், மாநில மகளிர் அணி செயலாளர் மதுபாலாராஜா, மாவட்ட துணைச் செயலாளர் ராபர்ட் ஜான்சன், மகளிர் அணி பொறுப்பாளர்கள் நாகம்மாள், ஜெயஸ்ரீ, நகரச்செயலாளர்சீனிவாசன், தீபக், அருள், ராக்கி உள்ளிட்ட மாவட்ட மற்றும் நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூரில் வக்கீல் வீ. சு. ராமலிங்கம் படத்திறப்பு நினைவுமலர் வெளியீட்டு நிகழ்ச்சி

ஐகோர்ட் நீதிபதி, ஓய்வு பெற்ற நீதிபதி பங்கேற்பு



தஞ்சாவூர் செப்.21

தஞ்சாவூரில் வக்கில் வீ.சு. இராம லிங்கம் படத் திறப்பு, நினைவுமலர் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஜெகதீஷ் சந்திரா, ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் அலி கலந்து கொண்டனர் தஞ்சாவூர் வக்கீல்கள் சங்கம்சார் பில் மறைந்த வக்கீல் வீ .சு. ராமலிங்கம் படத்திறப்பு நிகழ்ச்சி நடந்தது நிகழ்ச்சிக்கு வக்கீல் வைத்திய லிங் கம் தலைமை தாங்கினார் .வக்கீல் சங்கத் தலைவர் ஜீவக்குமார் செயலாளர் பிரசன்னா, தமிழ்நாடு புதுச்சேரி வக்கீல்கள் சங்க உறுப்பினர் வேலு கார்த்திகேயன், முன்னாள் வக்கீல் சங்கத் தலைவர் சிவசுப்பிரமணியன், முன்னாள் எம்எல்ஏ ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை ஐகோர்ட் வக்கீல் சேசு பாலன் வரவேற்றார் .இதில் சென்னை ஐகோர்ட் நீதிபதி ஜெகதீஷ் சந்திரா கலந்துகொண்டு வக்கீல் வீ.சு. ராமலிங்கம் படத்தை திறந்து வைத்தார். ஐகோர்ட் ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் அலி நினைவு மலரை வெளியிட்டார். இதில் வக்கீல்கள் குப்புசாமி, பூங்கோதை, பாலகிருஷ்ணன், காமராஜ், ஜெயச்சந்திரன், வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

விழாவில் ஐகோர்ட் நீதிபதி ஜெகதீஷ் சந்திரா பேசுகையில், வக்கீல்கள் வாதிடுவதோடு, தன்னை சுற்றி என்ன நடக்கிறதுஎன்பதையும்அறிந்து கொள்ளவேண்டும் .ஒரு வக்கீலின் வாழ்க்கையை பார்க்கும் போது அவர் எத்தகைய வழக்குகளில் வெற்றி பெற்றார். என்பதே பார்ப்பார்கள். இங்கு பேசியவர்கள் உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வேண்டும் என்று கூறினார்கள்

ஆனால் வீ.சு.ராமலிங்கம் ஆங்கிலம் தான் வேண்டும் என்றார் அவருடைய கருத்து தான் எனது கருத்து ஏனென்றால் சுப்ரீம் கோர்ட்டில் ஆங்கிலத்தில் தான் வாதிடுவார் .இவ்வாறு அவர் கூறினார்

நிகழ்ச்சியில் வக்கீல் எஸ் எஸ் ராஜ்குமார் ,த.மா.க மாநில செயற் குழு உறுப்பினர் சுரேஷ் மூப்பனார், நடிகர் துரை சுதாகர், ஏடு இசட் ஸ்பெஷலிஸ்ட் மருத்துவமனை தலைவர் பாஸ்கர், மற்றும் வக்கீல்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள் மறைந்த வக்கீல் வீ.சு.ராமலிங்கம் குடும்பத்தினர் உள்பட பலர் கலந்து கொண்டனர் . நிறைவில் வக்கீல் வீ.சு. இராமலிங்கத்தின் மகன்கள் சேரலாதன் ,செம்பியன் நன்றி கூறினர்.

மாரண்டஅள்ளியில் கனமழை... சாலைகள், அரசு பள்ளி, வீடுகளுக்குள் புகுந்த மழைநீர்



தருமபுரி செப்டம்பர் 21

தருமபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி பகுதியில் நேற்று நள்ளிரவு பெய்த கனமழையால் பல்வேறு பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. பஞ்சப்பள்ளி சாலை, அரசுமகளிர்மேல்நிலைப் பள்ளி வளாகம், கால்நடை மருத்துவமனை மட்டுமின்றி குடியிருப்பு பகுதிகளிலும் மழைநீர் புகுந்ததால் பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர். ஒரே இரவில் 118 மில்லி மீட்டர் மழை பதிவான நிலையில், சாலைகளில் தேங்கிய மழைநீரால் வாகனஓட்டிகளும்சிரமத்திற்குள்ளாகினர். மாரண்டஅள்ளி பஞ்சப்பள்ளி சாலையில் மழை நீர் அதிகளவில் தேங்கி உள்ளதால், சாலையை கடந்து செல்ல வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் தண்ணீருக்குள் மெதுவாக ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. மழைநீர் சாலைகளில் மட்டுமின்றி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும், கால்நடை மருத்துவமனை, விவசாயநிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளிலும் புகுந்ததால் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் என தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக, குடியிருப்பு பகுதிகளுக்குள் மழைநீர் புகுந்ததால் பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை பாதுகாப்பாக வைக்க முடியாமல் சிரமப்பட்டு வருகின்றனர். வீடுகளை சுற்றிலும் தண்ணீர் தேங்கியதால் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் வெளியே செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில்... மாரண்டஅள்ளி பேரூராட்சி பகுதிகளில் போதுமான அளவில் மழைநீர் வடிகால் மற்றும் சாக்கடை கால்வாய் வசதி இல்லாததால், கனமழை பெய்யும் ஒவ்வொரு முறையும் மழைநீர்சாலைகளிலும் குடியிருப்பு பகுதிகளிலும் தேங்குவதாக தெரிவித்தனர். கடந்த 3 ஆண்டுகளாக இதேபோன்ற வெள்ள பாதிப்பு தொடர்ந்து ஏற்பட்டு வருவதாகவும், பல முறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றும் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். மழைக்காலங்களில் மட்டும் தண்ணீரை அகற்றுவதற்கு பதிலாக, மழைநீர் செல்லும் பாதைகளை முறையாக சீரமைத்து, தேவையான இடங்களில் புதிய வடிகால் கால்வாய்களை அமைக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர். மேலும், மழைநீர் தேங்கும் தாழ்வான பகுதிகளை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, எதிர்காலத்தில் இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படாத வகையில் நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். ஒரே இரவில் 118 மில்லி மீட்டர் மழை பெய்ததால் மாரண்டஅள்ளி பகுதியில் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியுள்ள நிலையில்... ஒவ்வொரு மழைக்காலத்திலும் தொடரும் இந்த வெள்ள பாதிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க பேரூராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்குமா? என்பதேதற்போது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

கைவினை கலைஞர்களுக்கான தொழிற் தேர்வு விண்ணப்பிக்க கலெக்டர் அழைப்பு

நாகர்கோவில், செப்.21

2027 –ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் டிஜிடி ல் நடத்தப்படும் அகில இந்திய தொழிற்தேர்வில் தனித்தேர்வு 2027 ம் ஆண்டு ஜூலை. மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்வில் கலந்து கொள்ள தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தனித்தேர்வராக விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள், விண்ணப்பபடிவம், முழு விவரங்கள் அடங்கிய விளக்க குறிப்பேடு மற்றும் தேர்வுகட்டணம் செலுத்துவதற்கான வழிகாட்டுதல் ஆகியவற்றை www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். தேர்வுகட்டணத்தை (ரூ.200/ ரூபாய்இருநூறுமட்டும்) www.karuvoolam.tn.gov.in என்ற இணையதளத்தின் வழியாக இ செல்லான் மூலம் செலுத்தி, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்களை உரிய ஆவணங்களுடன்விளக்ககுறிப்பில் குறிப்பிட்டுள்ள மாவட்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

தகுதியுள்ள விண்ணப் பதாரர்களுக்கு, முதனிலைத் தேர்வுக்கான எழுத்துத்தேர்வு 26.11.2026 அன்று கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும். எழுத்துத்தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு மட்டும் செய்முறை தேர்வு 27.11.2026 அன்று நடைபெறும். இதற்கான முழு வழிகாட்டுதல்கள்இணையதளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

தனித்தேர்வராக தேர்வு எழுத 21.09.2026 இன்று முதல் விண்ணப்பிக்கலாம். தனித்தேர்வராக விண்ணப்பிக்க கடைசி தேதி 09.10.2026. அதற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும், கூடுதல் விவரங்களை உதவிஇயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், கோணம் என்ற முகவரியில் செயல்படும் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது 94435 79558 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இந்த தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தெரிவித்துள்ளார்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் "மாசறு தஞ்சை"என்ற பெயரில் ஒருங்கிணைந்த தீவிர தூய்மை பணி

அமைச்சர் வினோத் தொடங்கி வைத்தார்



தஞ்சாவூர் செப். 21

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் தஞ்சாவூர் மாவட்டநிர்வாகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் கும்பகோணம் மாநகராட்சி சார்பில் கும்பகோணத்தில் "மாசறுதஞ்சை"என்ற பெயரில் ஒருங்கிணைந்த தீவிர தூய்மை பணி தொடங்கியது.

தூய்மை பணியினை அமைச்சர் வினோத் தலைமை தாங்கி கொடியசைத்து தொடங்கி வைத்து, பஸ் நிலையத்தில் தூய்மை பணி மேற் கொண்டார். கலெக்டர் ரேவதி முன்னிலை வகித்தார்

இதனைத் தொடர்ந்து தூய்மை உறுதிமொழி ஏற்கப்பட்டது. நிகழ்ச்சியில் மேயர் சரவணன், உதவி கலெக்டர் திருமலை, ஆணையர் சுதா, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வேதா உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை தொடர்ந்து அமைச்சர் வினோத் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார் அப்போதுஅவர்கூறியதாவது;

கும்பகோணம் பஸ் நிலையத்தில் பொதுமக்களுக்கு இடையூறாகஉள்ள ஆக்கிரமிப்பு கடைகளை உடனடியாக அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. வரவிருக்கும் மகாமக பெருவிழாவை முன்னிட்டு பஸ் நிலையத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மாற்றங்கள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது .குளிரூட்டப்பட்ட பயணிகள் காத்திருப்போர் அறையை விரைவில் சீரமைத்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடைமடை வரை பாசன நீர் சென்றடைந்து உள்ள நிலையில், விவசாயிகளின் தேவைக்கேற்ப ஜனவரி மாதம் வரை தொடர்ந்து தண்ணீர் திறந்து விட அரசு நடவடிக்கை எடுக்கும் .விவசாயிகள் தங்கள் பகுதி மண் மற்றும் கால நிலைக்கு ஏற்ப அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்களை தேர்வு செய் வது தொடர்பான ஆலோசனை பெற வேளாண் அதிகாரிகளை அணுகலாம் .தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த சுகாதார த்துறை மூலம் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட பகுதி பொதுமக்களுடன் கலெக்டர், எம்எல்ஏ கலந்துரையாடல்

நாகர்கோவில், செப்.21

விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட கீழ்கோதையாறு, வலியஏலா, ஒரு நூறாம் வயல் உள்ளிட்ட பகுதி மக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையில் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் பிரவீன் அவர்கள் முன்னிலையில் நேரில் சந்தித்து கலந்துரையாடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலெக்டர் கூறியதாவது:

விளவங்கோடு வட்டத்துக்குட்பட்ட கீழ்கோதையாறு, வலி ஏலா, நூறாம் வயல் உள்விட்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. பல தலைமுறைகளாக வனத்தோடு ஒன்றி வாழ்ந்து வரும் எளிய மக்களை எக்காரணத்தைக் கொண்டும் வெளியேற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை. இதை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றதை தொடர்ந்து, முதலமைச்சரின் உத்தரவின்



பேரில் இந்த ஆய்வு மற்றும் நேரடி சந்திப்பு நடைபெற்றுள்ளது. கோதையாறு வனப்பகுதியில் வசிக்கும் பழங்குடியின மற்றும் அப்பகுதி மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் மாவட்ட நிர்வாகம் பாதுகாப்பாக இருக்கும் என்றும், உச்சநீதிமன்ற உத்தரவு தொடர்பாக சீராய்வு மனு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என கலெக்டர் கூறினார்.

தொடர்ந்து கடையால் பகுதியில் தனியார் திருமண மண்டபத்தில் தனியார் காடுகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மேலும் திருவட்டார் திற்பரப்பு பகுதியில் ரூ.2.90 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் சாலை சீரமைப்பு மற்றும் தடுப்புச் சுவர் அமைக்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடதுறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் மாலதி, உதவி வன பாதுகாப்பு அலுவலர்நிதின், விளவங்கோடு வட்டாட்சியர், வன சரக அலுவலர் யோகேஷ்வரன், உதவிப் பொறியாளர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

விழுப்புரத்தில் பேனரை அகற்றும் போது மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு; 4 பேர் காயம்

விழுப்புரம்: விழுப்புரத்தில் பேனரை அகற்றும்போதுமின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார், 4 பேர் காயமடைந்தனர்.

விழுப்புரம், கே.கே. ரோடு, கணபதி நகர் ஐங்ஷன் பகுதியில் இன்று (20.09.2026) காலை சுமார் 8 மணியளவில், கணபதி நகர் பகுதி இளைஞர்கள் சார்பில் வைக்கப் பட்டிருந்த பேனரை அகற்றி, அதே பகுதியைச் சேர்ந்த கரண் என்ற கதிர்வேல் என்பவரின் மகன் மித்ரனின் முதல் பிறந்த நாளை முன்னிட்டு புதிய பேனர் வைப்பதற்காக சிலர் முயன்றுள்ளனர். அப்போது பழைய பேனரை அகற்றிக் கொண்டிருந்தபோது, பேனர் எதிர்பாராதவிதமாக அருகிலிருந்த உயர் அழுத்த மின்கம்பியில் (IIT Line) பட்டதில், பேனரை பிடித்துக் கொண்டிருந்த மதன் குமார் (28) என்பவர் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இச்சம்பவத்தில் கதிர்வேல் (30), வஞ்சிநாதன் (21), பூவரசன் (24) மற்றும் கோகுல் (19) ஆகிய 4 பேர் காயமடைந்தனர். உயிரிழந்த மதன் குமார், கே.கே. ரோடு, ராஜீவ் காந்தி நகர் பகுதியைச் சேர்ந்தவர். பேனர் ஒட்டுதல்மற்றும்பெயிண்டிங் தொழில் செய்து வந்தார். அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த கதிர் வேல் மற்றும் பூவரசன் ஆகியோர் விழுப்புரம் இஎஸ் மருத்துவமனையிலும், வஞ்சிநாதன் விழுப்புரம் பழைய அரசு மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வஞ்சிநாதன்மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கோகுல் இரு உள்ளங்கைகளிலும் காயமடைந்து விழுப்புரம் இஎஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். காயமடைந்தவர்களின் உடல்நிலை சீராக உள்ளது. இச்சம்பவம் தொடர்பாக விழுப்புரம் மேற்கு காவல் நிலைய போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குமரியில் இந்து முன்னணி சார்பில் 9 இடங்களில் விநாயகர் சிலைகள் கரைப்பு

நாகர்கோவில், செப். 21

கன்னியாகுமரி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தியை ஒட்டி இந்து இந்து மகாசபா, சிவசேனா, இந்துமுன்னணி உள்ளிட்ட இந்து இயக்கங்கள் சார்பில் விநாயகர் சிலைகள் பூஜைக்கு வைக்கப்பட்டன. கடந்த 2 நாட்களாக நீர்நிலைகளில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் முதலாம் நாளான நேற்று முன்தினம் சொத்தவிளை கடல், சின்னவிளை கடல், குழித்துறை தாமிரபரணி ஆறுபோன்ற இடங்களில் மொத்தம் 391 சிலைகள் அமைதியான முறையில் கரைக்கப்பட்டன.

இதை அடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை 2 வது நாளாக விநாயகர் சிலைகள் கரைக்கப்படும் நிகழ்ச்சி குமரி மாவட்டத்தில் 9 இடங்களில் நடைபெற்றது. நாகர்கோவில் மாநகர் மற்றும் ராஜாக்கமங்கலம் ஒன்றியத்தில் உள்ளசிலைகள்நாகராஜா திடலில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு சங்குதுறை கடலில் கரைக்கப்பட்டன. தோவாளை ஒன்றியத்தில் உள்ள சிலைகள் தோவாளைசுப்பிரமணிய சுவாமி கோயில் அருகில் இருந்து புறப்பட்டுபள்ளிகொண்டான் அணையில் கரைக்கப்பட்டது.அகஸ்தீஸ்வரம் ஒன்றியம், கன்னியாகுமரி நகரில் உள்ள சிலைகள்சுசீந்திரம்தாணுமாலியன்சுவாமிகோயில் அருகில் இருந்து புறப்பட்டு கன்னியாகுமரி கடலில் கரைக்கப்பட்டது.

குளச்சல் நகரில் உள்ள சிலைகள் குளச்சல் அண்ணா சிலை சந்திப்பில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு மண்டைக்காடு கடலில்



கரைக்கப்பட்டது. குருந்தன்கோடு ஒன்றியத்தில் உள்ள சிலைகள் திங்கள் நகர் ராதாகிருஷ்ணன் கோவில் முன்பு இருந்து தொடங்கி மண்டைக்காடு கடலில் கரைக்கப்பட்டது. தக்கலை ஒன்றியத்தில் உள்ள சிலைகள் வைகுண்டபுரம் ஸ்ரீ ராமர் கோவிலில் இருந்து ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு மண்டைக்காடு கடலில் கரைக்கப்பட்டது.

திருவட்டார் ஒன்றியத்தில் உள்ள சிலைகள் செருப்பாலூர் முத்தாரம்மன் கோவில் பகுதியில் இருந்து கொண்டு செல்லப்பட்டு திற்பரப்பு அறிவியல் கரைக்கப்பட்டது. கிள்ளியூர் ஒன்றியத்தில் உள்ள சிலைகள் கருங்கல் கூனாலுமூடுசாஸ்தா கோவில் முன்பகுதியில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு மிடாலம் கடலில் கரைக்கப்பட்டது.

முஞ்சிறை ஒன்றியத்தில் உள்ள சிலைகள் அஞ்சுகண்ணு கலுங்கு மாடன் தம்புரன் இசக்கியம்மன் கோவிலில் இருந்து கொண்டு செல்லப்பட்ட தேங்காப்பட்டணம் கடலில் கரைக்கப்பட்டது. குருந்தன்கோடு ஒன்றியத்தில் உள்ள சிலைகள் திங்கள் நகர் ராதாகிருஷ்ணன் கோவில் முன்பு இருந்து தொடங்கி மண்டைக்காடு கடலில் கரைக்கப்பட்டது. தக்கலை ஒன்றியத்தில் உள்ள சிலைகள் வைகுண்டபுரம் ஸ்ரீ ராமர் கோவிலில் இருந்து ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு மண்டைக்காடு கடலில் கரைக்கப்பட்டது. பத்மநாதபுரம் நகரில் உள்ள சிலைகள் தக்கலை பெருமாள